**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.63/2025**

PW-4

| Name | நடராஜன்(PW4) | | |
|---|---|---|---|
| Father's Name | குமாரசாமி | தொழில் | |
| Village | வள்ளிபுரம் | | |
| Taluk | அவிநாசி | Age | 29 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் டைலராக பணிபுரிந்து வருகிறேன். 13.11.2024 ம் தேதியன்று மதியம் 1-1.45 மணி அளவில் நான் என்னுடைய கம்பெனியில் சாப்பாட்டு நேரம் என்பதால் சாப்பிடுவதற்காக வெளியே வந்த போது போலீசார் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். அதில் நானும் என்னுடன் பணி புரியும் கார்த்தி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இறந்துபோன லோகநாதன் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அ.சா.1 மகேஸ்வரன் என்னுடைய கம்பெனியில் பணிபுரிகிறாரா என்றால் இல்லை. எனக்கு அவர் யார் என்று தெரியாது. சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்தார்களா என்றால் இரண்டு, மூன்று நபர்கள் இருந்தார்கள். என்னுடைய வீட்டுக்கும் நான் பணிபுரியும் கம்பெனிக்கும் எத்தனை கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்ற தாளில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும் என்னிடம் சொன்ன பின்பு தான் கையொப்பம் பெற்றனர். மாதிரி வரைபடத்தில் என்னென்ன கடைகள் வரையப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். போலீசார்

என்னை எத்தனை மணிக்கு விசாரித்தனர் என்றால் 1:30 மணி முதல் 1.45 மணிக்குள் விசாரித்தனர். நான் மகேஸ்வரன் என்பவரின் நண்பர் என்பதால் மகேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இல்லை. மகேஸ்வரன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |